மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
Mount Druitt Tamil Study Centre
Mobile: 0413 229 638 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au




# ஆண்டு 7

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

அனைவருக்கும் அன்பான வணக்கம்!!!
புத்தகம் என்னும் அறிவுச் செல்வம் என்ற தலைப்பில் கூறவுள்ளேன்.

## புத்தகம் என்னும் அறிவுச் செல்வம்

கற்ற அறிவை உலகமெங்கிலும் பரப்புவதற்கும், பல்வேறு கலாசாரங்களைப் பற்றிய விழிப்புணர்வு பெறுவதற்கும், புரிதல், சகிப்புத்தன்மை போன்றவை மூலம் மனிதர்களின் ஒழுக்கத்தை மேம்படுத்தவும், புத்தகம் ஒரு சிறந்த அறிவுச் செல்வமாகும்.

**"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"** என்னும் குறள் மூலம்,

கற்பதற்கு தகுதியான நூல்களை தெளிவுடன் கற்றல் வேண்டும். கற்ற பின்னர் நாம் கற்ற கல்வியின் அறிவின்படி நடக்க வேண்டும் என திருவள்ளுவர் தெளிவாகக் கூறியுள்ளார்.

பழக்க வழக்கங்களை மாற்றுவதற்கும், ஆரோக்கியமான புதிய சிந்தனைகளை ஊக்குவிப்பதற்கும், புதியனவற்றைக் கற்றுக் கொள்வதற்கும், புதிய கண்டுபிடிப்புகளுக்கும் வாசிப்பு தேவையாகும்.

வாசிப்பு என்பது நம் மூளைக்கு உடற்பயிற்சி போன்றது. அது பல்வேறு வகைகளில் பரந்த அளவிலான தகவல்களை வழங்குகின்றது. அதுமட்டுமல்ல, மொழித்திறனை வளர்த்து, நினைவுத் திறனை அதிகரிக்கின்றது. பகுத்தாராயும் திறனும் வளர்கின்றது.

எந்தவொரு செய்தியை எவர் சொன்னாலும் அல்லது யார் மூலம் கேட்டாலும் அதை அப்படியே நம்பி ஏற்றுக் கொள்ளாமல், உண்மை எது என்பதை ஆராய்ந்து தெளிவு பெறுவதே அறிவுடைமையாகும் என்பதனையே,

**"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு" என வள்ளுவர் கூறியுள்ளார்.**

எனவே, பகுத்தறிவுடன் சமூகத்தில் தோன்றும் பிரச்சனைகளை சுமுகமாக தீர்த்துக்கொள்ளவும், இக்கட்டான சூழ்நிலைகளைச் சமாளிக்கவும், வாழ்வில் வெற்றி பெறவும், புத்தகம் என்னும் அறிவுச் செல்வம் நிச்சயம் உதவும்.



நன்றி.
வணக்கம்.

**ஆக்கம்:**
**திருமதி. ராஜேஸ்வரி குலவீரசிங்கம்**